உ

கடவுள் துணை.

ஞானவுடற்கூறும்,

பொதிகைமலை சிவகீர்த்தனையும்,

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்

நடபாயச்சிந்தும்

அடங்கியிருக்கின்றன.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி.

கடவுள் துணை.

ஞானவுடற்கூறு.

வெண்பா.

சுழியறியார்க்கென்னநலஞ் சுகமறியார்க்கென்னகுரு
வழியறியார்க் கென்னவெய்தும்-வாறுகாண்
சுழியறியாமூலமறிந் தவ்வழியில்முத்தியடையார்க்கு
நமன்காலமவர்க்கேமரணங் காண்.

சந்தணம்பூசிநீ சாகப்போருய்-உன்னை
சேர்ந்தபந்துக்கள் ஸீமத்திற்கொண்டுபோய்
செந்தணலாக்குவார் மானிடனே. க

அஞ்சடிவெட்டி அடிபடைபோட்டு
அதற்குமேல்வீடு கட்டுகிருய்-நீ
கட்டினவீட்டுக்கு காரணமாரணங்
கண்டதுண்டோசொல்லு மானிடமே. ௨

எட்டுகேட்டுவீடு கட்டுகிருய்நீ
எங்கெங்கேதனத்தைப் புதைக்கிருய்-நீ
புதைத்ததனத்தை யின்னருதென்று
பிரித்துச்சொல்லடா மானிடமே. ௩

மட்டக்குதிரைமே லேறிக்கொண்டுநீ
பட்டணமெங்கும் சுற்றுகிருய்
பொட்டெனவேஎம னேலேவந்தால்
புரப்பட்டுபோவாயே மானிடமே. ௪

கிணத்தைச்சுற்றிப்பில் முளேத்ததுபோல
கிளேக்குதேநீர் செய்தபாவம்-நீ
செய்தபாவம் துலேக்கவேதான்
விஷ்ணுவைத்தேடடா மானிடமே. ௫

பருப்போடும்பர மானந்தத்தோடும்
பசும்நெய்போட்டுநீ உண்ணுகிருய்
நெருப்பிலேபோட்டு கொளுத்திவிட்டால்-நீ
நீராய்போவாயே மானிடமே. ௬

ஆத்திரத்தாலே பணங்காசைதேடிநீ
மூத்திரக்குழியில் மாளுகிருய்-நாளே
சூஸ்திரத்தாரையை கண்டுவிட்டால்
சொல்லாமல்போவாயே மானிடமே. ௭

அரியாதவஸ்துவை அரியலாமென்ருர்
அரியனும்பலனே அரியுமென்ருர்
மதுருநெல்லூர் சாமிகளெல்லோரும்
வெறுத்துசொல்வாயே மானிடமே. ௮

ஞானவுடற்கூறு-முற்றிற்று

பொதிகைமலை சிவகீர்த்தனை.

இ-ம்-இந்துஸ்தான்.

பல்லவி.

பிச்சையிடாநின்ற பேதைமடையர்கள்
கச்சேரிக்கேகொடுப்பார் சிவனே (பிச்சை)

அநுபல்லவி.

உச்சிதமாரை ஜென்மங்கடைத்தேர
இச்சைவையாறகுல அச்சுதாகேழ்க்கினும் (பிச்சை)

சரணங்கள்.

இந்திராதிஜாலப்பிரசங்கஞ்செய்தாலவர்
சிந்தைகரையார்கள் சிவனே
தந்தைதாயார்பசியாலேயிரந்தாலும்
தாயார்டம்பத்தினலழியும்பாவி (பிச்சை)

வெள்ளைசள்ளையாகவஸ்திரமுடுத்தினல்
நல்லமுதலியென்பார் சிவனே
அல்லலையறுத்தஅடியார்களைக்கண்டால்
தள்ளுதள்ளுதெருவில்நில்லுமென்றபாவி ()

ஆஸ்திகுலமென்றுபேசும்நகம்பர்தன்
நேசம்இனிவேண்டேன் சிவனே
நாஸ்திதாசர்களைபூசித்தவன்வார
வாசிவீரமுனியீசானந்தங்கேழ்க்க (பிச்சை)

பொதிகைமலை சிவகீர்த்தனை-முற்றிற்று.

திரு அல்லிக்கேணி

ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமாள்

நடபாயச்சிந்து.

வெண்பா.

அற்புதமாகவே அன்பனுள்வார்செட்டி [ருளாம்
செப்பெரியபங்களாவும் செய்துவைத்த-மெம்பொரு
பார்த்தனிடச்சாரதியிப் பவனிவருமானந்தம்
நேத்திரத்தால்காணு நின்று.

இ-ம்-இந்துஸ்தான்.

பல்லவி.

காவித்திருபங்களா அத்தாவில்வசந்தமாக
காரணபார்த்தசாரதி வரும்பவனி (காவித்)

அநுபல்லவி.

காவித்தென்னஞ்சோலை வாழைக்கமுகம்சாலை
கனிபலாஅகில்புன்னை விருக்ஷத்தில்கூவி
குயில்கள்கொஞ்சிஆடி மயில்கள்மிஞ்சுநாடி
கெம்பீரத்துடன் வாராரே. (காவித்)

சரணங்கள்.

சித்திரவிசித்திர தேவர்மகிழ்கின்ற
சிப்பிகள்சமைத்தோர் மாளிகை
லஸ்தர்குளோபுடன் சரகுளோபுகள்தொங்க
லக்ஷணமானதோர் படங்களும்தூக்கி (காவித்)

அண்டமளாவிய அரும்பச்சைபந்தலிலே
அனேகவாழைமரம் தூக்கியே
கண்கொண்டகாட்சியாய் கதிர்சுடர்தீபங்கள்
காட்சியிதுவேகாட்சி காணவே (காவித்)

இருபுரமும்தடாகம் இரங்கும்நடபாயி
அல்லிசெந்தாமரை பூர்க்கவும்
கரும்வண்டுதும்பிரண்டு விரும்பியதேனையுண்டு
கதிச்சுழன்றுகீதம் பாடவும் (காவித்)

மேளவாத்தியமுழங்க மேலோர்கண்டுபுகழ
வெற்றிவிமானத்தில் ஏகிட
ஆலவட்டம்குடை கௌரிவெண்சாமரைகள்
அன்பாய்பந்நீர்கொண்டு வீசவும் (காவித்)

வேதவேதியர் வேதம்புரியவும்
விஷ்ணுநாமம் பக்தர்பாடவும்
பேதகமில்லாதெய்வ ரம்பையர்போலுமே
பெண்கள்பிடித்து நின்றாடவும் (காவித்)

அதிரவெடிகளும் புருசுபாணங்களும்
அனேகவிதகம்ப பாணமும்மதியென
பிர்ம்மிக்கமத்தாப்பு சோதியால்
மண்டலமெங்கும் பிரகாசிக்க (காவித்)

தாமிஷமில்லாமல் சர்வோத்திரட்களும்
சரணுகெதியென்று துதிக்கவே
சுவாமிபிள்ளைசிஷன் யானுந்துதித்திட
சனர்த்தவனு யெனையாளவேணுமே (காவித்)

நடபாயச்சிந்து முற்றிற்று.